**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**E.A.No.2/2022 in E.P.No.57/2021 in MCOP 341/1999**

**ம.சா. – 1 –இளவேந்தன்**

**நாள். 01.03.2024**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

பழனி , சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற MCOP No.341/1999 வழக்கின் மனு மற்றும் உத்தரவுகளின் நகல் தான் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம். என் நிறுவனம் சார்பாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். மேற்படி எம்.சி.ஓ.பி வழக்கு நடத்துவதற்கு எங்கள் நிறுவனத்திலிருந்து திருமதி.ஆர்.சித்ரா பாலாஜி என்பவரை வழக்கறிஞராக நியமித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த போதே, மனுதாரர் மல்லிகா 08.03.2000ம் தேதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதன்பிறகு அவரது வாரிசுகளை அந்த வழக்கில் மனுதாரர்களாக சேர்த்தார்கள் என்றால் சரிதான். அந்த மனுவின் நகல் எங்கள் அலுவலகத்தில் கொடுக்கப்பட்டு ஆட்சேபணை இல்லை என்பதால் மேற்படி மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எங்களது வழக்கறிஞர் ஆட்சேபணை இல்லை என்று சொன்னதால் தான் மேற்படி மனு அனுமதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன்பின்பு மேற்படி அசல் மனுவை திருத்துவதற்காக திருத்தல் மனு தாக்கல் செய்து, அதுவும் எங்களது வழக்கறிஞர் ஆட்சேபணை இல்லை என்று குறிப்பு செய்ததன் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் 21.07.2008ம் தேதி தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணத்தில் 2000,2001,2002,2003 மற்றும் 2008ல் குறிப்புகள் மட்டுமே உள்ளன என்றும், 2004,2005,2006,2007 ஆகிய ஆண்டுகளுக்கான குறிப்புகள் ஏதும் அதில் இல்லை என்றால் சரிதான். வாரிசு சான்றிதழ் என்பது அரசு அதிகாரிகளால் முறைப்படி விசாரணை செய்து வழங்கப்படும் ஆவணம் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கில் உத்தரவானதற்கு பிறகு அந்த உத்தரவை நிறைவேற்றுவதற்காக பழனி நீதிமன்றத்திலிருந்து திண்டுக்கல் நீதிமன்றத்திற்கு Transmit செய்து உத்தரவாகி உள்ளது என்றால் சரிதான். அதன்படி EP 112/2014 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு, அதில் எங்களுக்கு அறிவிப்பு முறைப்படி அனுப்பப்பட்டு, அந்த அழைப்பாணையின் பேரில் எங்கள் நிறுவனத்தில் ஆஜராகாததால் ஒருதலைப்பட்ச தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டு, ஜப்தி செய்ய உத்தரவானது என்றால் சரியல்ல. அந்த உத்தரவின் பேரில் ஜப்திக்கு படிகட்டி, அமீனாவுடன் ஜப்தி செய்வதற்கு சென்று, பாலிசி சண்டிகரில் இருந்து வரவேண்டும் என்று குறிப்பு செய்யப்பட்டு,

திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதன்பிறகு எங்கள் நிறுவனத்திலிருந்து MCOP 341/1999 வழக்கில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவும், காலதாமதத்தை மன்னிக்கவும் கோரி இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன என்றால் சரிதான். அந்த இரண்டு மனுக்களும் தள்ளுபடி ஆகிவிட்டன என்றால் சரிதான். அதன்பின் EP 112/2014 –ல் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய மனு செய்தோம் என்றால் சரிதான். அந்த ஒருதலைபட்ச உத்தரவு ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்நிலையில் மல்லிகாவின் வாரிசான நாகம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அதன்பின்னர் வாரிசுகளை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காததால் 23.10.2019ம் தேதி மேற்படி நிறைவேற்றுதல் மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி நாகம்மாளின் வாரிசுகள் ஆதார் அட்டையின் அடிப்படையிலும், ரேசன் கார்டின் அடிப்படையிலும் வாரிசு சான்றிதழ் பெறப்பட்டு, மனுதாரர்களாக சேர்க்கப்பட்டு, இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. EP 57/2021 –ல் தபால் மூலமாகவும், நீதிமன்றம் மூலமாகவும் எங்கள் அலுவலகத்திற்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். EP 57/2021 –ல் மனுதாரர் விசாரிக்கப்பட்டு, அவர் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட பின்பு, இந்த மனுவை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நிறைவேற்று மனு தாக்கல் செய்வதற்கு Succession Certificate தேவையில்லை என்றால் சரியல்ல. எங்கள் அலுவலகத்தில் புலன் விசாரணை செய்யப்பட்ட அடிப்படையில் கொடுக்கப்பட்ட அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த புலன் விசாரணை அறிக்கையை தாக்கல் செய்தால், மல்லிகாவின் வாரிசு நாகம்மாள் என்றும், நாகம்மாளின் வாரிசு இந்த மனுதாரர்கள் என்றும் தெரியவந்துவிடும் என்றும், அதனால் தான் தாக்கல் செய்யவில்லை என்று சொல்வது சரியல்ல. மல்லிகா இறந்த பிறகு, அவரது தாயார் நாகம்மாள் தவிர வேறு யாரும் வாரிசுதாரர் என்று உரிமை கொண்டாடி மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நாங்கள் தாக்கல் செய்துள்ள CPC பிரிவு 47 மனு பொருந்தாது என்றால் சரியல்ல. அதனால் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>** /ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN
Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.03.01 16:21:48 +0530

Additional District Judge,

Dindigul.